முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கோவி செழியன், பகுதி கழக செயலாளர்கள் என். சந்திரன், ப. குணாளன், நகரச் செயலாளர் டி.பாபு, பொதுக்குழு உறுப்பினர் கே. எத்திராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மேகதாது அணை தொடர்பான தனித் தீர்மானம்:

திருத்தங்களை இணைத்ததில் மகிழ்ச்சி!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை,ஜூன்.20-

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று மேகதாது அணை தொடர்பாக தனித் தீர்மானம்ஒன்றுஒருமனதாகநிறைவேற்றியது. அத்தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திய, இரண்டு திருத்தங்கள்சேர்க்கப்பட்டதற்குமகிழ்ச்சிஅடைவதாக தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில், மேகதாதுவில்அணைகட்டமுயற்சிக்கும்கர்நாடகாவின் செயலுக்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தில்கொண்டுவரப்பட்டதனித் தீர்மானத்தை தி.மு.கழகம் சார்பில் ஆதரித்து உரையாற்றினோம்.

கழகத்தலைவர்மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேகதாதுவில்அணைகட்டமுயல்வதுNewDisputeஆக இருப்பதால், The InterState Water DisputesAct1956ன்படிபுதியதனிநடுவர்மன்றம்அமைக்கவேண்டும்என்றதிருத்தத்தைத்தீர்மானத்தில்சேர்க்கவேண்டும் என்றும்,,

இந்த தீர்மானத்தை கடிதமாக ஒன்றிய அரசுக்கு அனுப்பாமல், தமிழ்நாட்டு சட்டமன்றநாடாளுமன்றஉறுப்பினர்கள்ஒருகுழுவாகச்சென்றுநேரில்வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

நாம்அளித்தத்திருத்தத்தைஇணைத்துஒருமனதாகதீர்மானம்நிறைவேற்றப்பட்டதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

காவிரி மீதான தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தி.மு.கழகம் துணை நிற்கும்!

இவ்வாறுஉதயநிதிஸ்டாலின்அவர்கள் பதிவிட்டுள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட

தி.மு.க. மாணவர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர், ஜூன்.20-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம், நாளை 21.06.2026 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு, வல்லூரில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில், பி.எம். ஸ்ரீ திட்டத்திற்கு எதிர்ப்பு, சிபிஎஸ்இ பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் மும்மொழிக் கொள்கைக்கு எதிர்ப்பு, உயர்கல்விக்கான ஒரே ஒழுங்குமுறை அமைப்பை உருவாக்கும் நோக்கில் கொண்டு வரப்படும் VBAS மசோதாவிற்கு எதிர்ப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளது.

மேலும், மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 23.06.2026 அன்று நடைபெறவுள்ள ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளன.

எனவே, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதல்வர் விஜய் படத்தை வைத்து

பள்ளிக்குள் ரீல்ஸ் எடுத்து த.வெ.க.வினர் அட்டூழியம்!

உத்திரமேரூர் அருகே பரபரப்பு – நடவடிக்கை கோரி ஆட்சியரிடம் புகார்!

மதுராந்தகம், ஜூன்.20-

உத்திரமேரூர் அருகே தளவராம்பூண்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், மாணவர்கள் பாடம் படித்துக் கொண்டிருந்தபோது திடீரென உள்ளே நுழைந்த த.வெ.க. கட்சியினர் முதல்வர் விஜய்யின் படத்தை மாட்டி ரீல்ஸ் எடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், தளவராம்பூண்டி ஊராட்சியில் வினோபா நகர் பகுதியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் த.வெ.க. கட்சியின் ஒன்றிய செயலாளர் ராஜேஷ் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கட்சியின் சால்வையை அணிந்து பள்ளிக்கு வந்தனர். பள்ளி வகுப்பறையில் மாணவ, மாணவிகள் பாடம் படித்துக் கொண்டிருந்த போது திடீரென உள்ளே நுழைந்து செல்போன்களுடன் ரீல்ஸ் எடுத்தனர். மேலும் கையில் வைத்திருந்த படத்தைக் காட்டி இவர் யார் என்று தெரிகிறதா என்று மாணவ, மாணவிகளுக்கு பாடம் எடுக்கத் தொடங்கினர்.

அதில் ஒருவர் மாணவர்களிடம் பேசுகையில், இது யார் என்று தெரிகிறதா, இவர்தான் தமிழ்நாடு முதல மைச்சர் விஜய், உங்களுக்கெல்லாம் மாமா, எனக்கு அண்ணா என்று பாடம் எடுத்துள்ளார். மேலும் வகுப் பறையில் முதல்வர் விஜய் யின் படத்தை மாட்டி ரீல்ஸ் எடுத்துள்ளனர். இதே போன்று பட்டாங்குளம் கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளுக்கும் சென்று முதல்வர் விஜய்யின் படத்தை பள்ளியின் வகுப்பறைகளில் மாட்டி ரீல்ஸ் எடுத்துள்ளனர்.

இந்த அநாகரிகமான செயலில் ஈடுபட்டதை கண்டிக்கும் விதமாக அப்பகுதியைச் சேர்ந்த ஒன்றியக் குழு உறுப்பினரும், தி.மு.க. ஒன்றிய செயலாளருமான ஞானசேகரன் மாவட்ட கலெக்டர், பள்ளிக்கல்வித் துறை அதிகாரி ஆகியோருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில், த.வெ.க. கட்சி நிர்வாகிகள் பள்ளி நேரத்தில் சென்று வகுப்பறையில் முதல்வர் விஜய் படத்தை சுவரில் மாட்டி ரீல்ஸ் எடுத்ததை மாவட்ட நிர்வாகமும், கல்வி துறையும் இணைந்து விசாரணை நடத்த வேண்டும். இது போன்று அநாகரிக செயலில் ஈடுபட்டவர்கள் யார் என்று கண்டறிந்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளில் இது போன்று தவறு நடைபெறாதவாறு பள்ளிக் கல்வித் துறை கண்காணிக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

ரூ.1 கோடி மோசடி செய்த த.வெ.க. நிர்வாகி

பாதிக்கப்பட்டவர்கள் தீக்குளிக்க முயற்சி!

ஈரோடு எஸ்.பி அலுவலகத்தில் பரபரப்பு!

ஈரோடு, ஜூன் 20 -

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி நேரு பஜார் ராஜா ராணி டிரேடர்ஸ் உரிமையாளர் மனோகரன் (48). இவர் மனைவி ஷீலா, மகன்கள் பார்த்திபன், நளின் ஆகியோருடன் நேற்று மதியம் ஈரோடு எஸ்.பி. அலுவலகத்துக்கு மனு அளிக்க வந்தார். அப்போது மனோகரன், கேனில் இருந்த மண்ணெண்ணெயை திடீரென்று தன் உடல் மேலும், மனைவி, மகன்கள் மீதும் ஊற்றினார்.

அதிர்ச்சியடைந்த போலீசார் உடனடியாக நான்கு பேரையும் மீட்டு அவர்கள் மீது தண்ணீரை ஊற்றினர். பின்னர் விசாரணைக்காக, ஈரோடு டவுன் டி.எஸ்.பி. அலுவலகத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மனோகரன் அளித்த புகார் மனுவில் கூறியிருந்தாவது:

நான் அரிசி வியாபாரி. 2025 மே மாதம், ஈரோட்டை சேர்ந்த நந்தகோபால், தேவி, சதீஷ் ஆகியோர் என்னிடம் ரூ.19 லட்சத்துக்கு அரிசி கொள்முதல் செய்தனர். அப்போது, ரூ.4 லட்சம் கொடுத்தனர்.

ஒரு வாரத்தில் மீதி உள்ள ரூ.15 லட்சத்தை கொடுப்பதாக தெரிவித்தனர். ஆனால், இதுவரை பணம் கொடுக்கவில்லை.

இதுகுறித்து பல முறை புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. இவர்கள் மளிகை பொருட்கள் மொத்த வியாபாரம் என்ற பெயரில் தவெக வக்கீல் அணி மாவட்ட செயலாளர் அருண் தலைமையில் பல போலியான ஜி.எஸ்.டி. எண்களை எடுத்து கொண்டு என்னை போன்ற பல வியாபாரிகளை ஏமாற்றி மோசடி செய்து வருகின்றனர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டி ருந்தது. இதேபோன்று, திருச்சி பாப்பாகுறிச்சி தேவி பாஸ்கர் ரைஸ் மில் உரிமையாளர் ராஜா அளித்த புகார் மனுவில், "ஈரோட்டை சேர்ந்த நந்தகோபால், தேவி, லோகு, பகதூர் பாஷா ஆகியோர் 2024ம் ஆண்டு கணேஷ் டிரேடர்ஸ் பெயரில் ரூ.1 கோடியே 3 லட்சத்திற்கு என்னிடம் அரிசி கொள் முதல் செய்தனர்.

ரூ.18 லட்சம் மட்டுமே கொடுத்தனர். மீதி ரூ.85 லட்சம் இதுவரை வழங்க வில்லை. தவெக வக்கீல் அணி செயலாளர் அருண் தலைமையிலான இக்கும்பல் பல போலி ஜி.எஸ்.டி. எண்களை எடுத்து வியாபாரி களை ஏமாற்றி மோசடி செய்து பணம் சம்பாதிக்கின்றனர்.

இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி உள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 46 அ வட்ட பொறுப்பாளர் ச.ராஜன் ஏற்பாட்டில் சிறப்பு பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் வழக்கறிஞர் கே.பிரசாந்த், ஏ. செந்தில்நாதன், எஸ்.பிரேமா, எ.கிருஷ்ணன், அன்புராஜ் ஸ்ரீதர்.டி.பாலு, பி.கஜேந்திரன், கே.ரங்கநாதன், ஏ.ராஜன், சங்கீதா சந்தோஷ் குமார், கவிவாசன் எம்.லூயிஸ், பி.புகழேந்தி, ஆனந்த், சுப்பிரமணி, பிரான்சிஸ், சிவகுமார், பிடிசி.மூர்த்தி உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

எஸ்.ஜீவரத்தினம் தலைமை! சுற்றுச்சுழல் அணி – முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றம் சார்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

மயிலை த.வேலு – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்! எஸ்.முரளி முன்னிலை!

சென்னை, ஜூன் 20-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி சுற்றுசுழல் அணி தி.மு.க மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் சுற்றுசூழல் அணி எஸ். ஜீவரத்தினம் தலைமையில் (21.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி அளவில், 2வது மெயின் ரோடு, வெள்ளீஸ்வரர் தோட்டம், ஆர்.ஏ.புரம். சென்னை-28 என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, சென்னை தென்மேற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இதில் பகுதி செயலாளர் எஸ்.முரளி, 171வது வட்ட செயலாளர் துரைபார்த்திபன், 171வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி, 124 (அ) வது வட்ட பொருப்பாளர் மா.பா.அன்பு, மன்ற பொருளாளர் த.வேல்முருகன், மன்ற செயளாளர் சந்தோஷ்குமார் ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட அமைப்பாளர் சுற்றுகழல் அணி என்.எஸ். பாலசுப்பிரமணியன், ம. மாரிச்சாமி, செந்தில்குமார், அய்யாவு, உதுரைக் கண்ணு, டி.எஸ்.விஷ்ணு சங்கர், பி.சார்லி, Wefas க. பத்மநாபன், கோ.வெங்கட் ராமனன், லயன் பி.சக்தி வேல், ஜி.ஹரி நாராயணன், மு.வேல் ராஜன், கே.எல்.சிவானந்தம், உ. யுவராஜ், வரவேற்கின்றனர்.

மயிலை வேலு சம்மந்தம், மயிலை ஆர்.பாலு, எஸ்.சரவணன், ஆர்.கதிரவன், சி.கணேஷ்பாண்டியன், சுசீலாதுரைராஜ், ஹார்டுவோர்ஸ், எஸ். குமார், தென்றல் விஜய், மா.பா.தாமு, பி.எல்.தாஸ், டி.ரமேஷ், எம்.கே.பி.மணிமாறன், அருண்ராமஜெயம், எஸ்.வெங்கடேசன்,

மயிலை பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ், அ. தவனேசன், வி.வெற்றி வேல், கோ.கண்ணன், பா. பொன்னுசாமி, டி.ராஜ வேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன், மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வே. கார்த்திக், டி.ஜெகதீஷ்பாபு, எம்.பிரவீன்பாபு, ஏ.ஜான் பிரிட்டோ, எல். ராணி, சுந்தர், ரகு, மா.டி.எல்லி, M.S.T. மணிமாறன், எஸ்.சாந்தி, ஆர்.மணிகண்டன், ஏ.சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பகுதி துணை அமைப்பாளர்கள் சுற்றுசூழல் அணி: ஆர்.கே.முருகன், இ.தணிகாசலம், எஸ்.பிரசாந்த், தமின் பெனிக்ஸ், மகிமை லூர்துசாமி, மணி கண்டன், சந்துரு, அப்துல் லத்திப் சுகுமார் நன்றி கூறுகின்றனர்.

பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ சேவை தொடங்குவதில் தொடரும் தாமதம்!

சென்னை, ஜூன் 20 -

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் முதன்முதலாக நிறைவடைந்துள்ள பூந்தமல்லி பைபாஸ்-வடபழனி இடையிலான நீளமுடைய வழித்தடத்தில் மெட்ரோ சேவை தொடங்குவது மேலும் தாமதமாகியுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் பூந்தமல்லி பைபாஸ் - வடபழனி இடையே 14 புள்ளி ஆறு கிலோ மீட்டர் நீளமுடைய வழித்தடத்தில் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த வழித்தடத்திற்கு கடந்த பிப்ரவரி மாதம் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியிருந்தார்.

பின்னர், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து மே மாதத்தில் முழுமையான அனுமதியும் கிடைத்தது.

இதையடுத்து, சேவையை தொடங்குவதற்கான தொடக்க விழா தேதியை நிர்ணயிக்குமாறு ஒன்றிய அரசிடம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் கோரிக்கை வைத்தும் இது வரை திறப்பு விழா தேதி அறிவிக்கப்படவில்லை. இதனால் பயணிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதனால், மேற்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் இன்னும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வழித்தடம் செயல்பாட்டுக்கு வந்தால், தற்போது 90 நிமிடங்கள் ஆகும் ஐயப்பந்தாங்கல்-வடபழனி பயண நேரம் 45 நிமிடங்களுக்கும் குறைவாகும் என பொதுமக்கள் எதிர் பார்க்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மீஞ்சூர் மு. கேசவன்
ஜூன் 20 (2019)

கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.